புதுச்சேரி அரசு
வேளாண் துறை

# 18$^{வது}$ மலர், காய் மற்றும் கனி கண்காட்சி – 2018

## பத்திரிக்கை செய்தி

புதுச்சேரி அரசு வேளாண்துறை, காரைக்கால், பிப்ரவரி மாதம் 16-ம் முதல் 18-ம் தேதி வரை மலர், காய் மற்றும கனி கண்காட்சி புதிய நகராட்சி திடலில் நடைபெறுகிறது.

மாண்புமிகு வேளாண் அமைச்சர் மாநிலங்களவை உறுப்பினர், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயலர், வேளாண்துறையின் செயலர் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்காட்சியை திறந்துவைக்க இசைந்துள்ளார்கள்.

இந்த ஆண்டு நடத்தப்படும் மலர் கண்காட்சி, உள்ளூர் மட்டுமின்றி பெங்களூர், ஹோசூர் போன்ற இடங்களிலிருந்து பல வகையைச் சார்ந்த இலை மற்றும் பூக்கும் செடி வகைகள் தருவிக்கப்பட்டு இக்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

**காட்சி அரங்கம் :**

முதலில் நூற்றுக்கும் அதிகமான அலங்காரம் மற்றும் பூச்செடி வகைகளான ஆன்தூரியம், பெகோனியா, சாமந்திப்பூக்கள், டயன்தஸ், கார்னேசன், பென்டாஸ், டொரினியா, அரலி (குட்டை) வகைகள், பாய்ன்செட்யா மற்றும் ஆர்கிட் பூ வகைகள் மனதை கவரும் வகையில் அரங்கத்தில் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவதாக குறைந்தபட்ச இடத்தில் அதிகமான பூச்செடிகள் வளர்க்க **"செங்குத்து பூந்தோட்டம்"** (Vertical Garden) அமைக்கப்பட்டுள்ளது. அதாவது தரைகளில் மட்டுமே பூக்கள் வளர்க்காமல் சுவர்களின்மேல் அதாவது செங்குத்தாக பூக்கள் வளர்க்க முடியும் என்பதனையும் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், கொய் மலர்களைக் கொண்டு உறுவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி ... 2/-

வேளாண் மற்றும் வேளாண்துறை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களை செயல்விளக்கமான காட்சிகள் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

1. **வேளாண் அறிவியல் நிலையம்,** காரைக்கால்
2. **வேளாண் கல்லூரி** மற்றும் **ஆராய்ச்சி நிலையம்,** காரைக்கால்
3. **கால்நடைத்துறை,** காரைக்கால்
4. **மீன்வளத்துறை,** காரைக்கால்

ஆகியத்துறைகளில் பல்வேறு காட்சிகள் அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

5. **வேளாண் தொழில்நுட்ப முகமை** (ATMA), காரைக்கால்

**அழிவிலிருந்து உயிர்பித்தல் :** என்ற தத்துவத்தை மையமாக கொண்டு பொதுமக்களுக்கு குப்பைகளான உபயோகப்படுத்தப்பட்ட பொருள்களைக் கொண்டு வீட்டின் குறைந்த செலவில் தோட்டம், அலங்காரம் மற்றும் காய்கறித் தோட்டம் பற்றிய செயல்விளக்கம் மிக விமர்சியாக காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

மலர் கண்காட்சி போட்டிகள் 1) கொய்மலர் அலங்காரம் 2) மலர், தானியம், காய்கனி மற்றும் சிகை அலங்காரம் 3) பூந்தொட்டி சேகரிப்பு 4) தழை இன அழகுச் செடிகள் சேகரிப்பு 5) காய்கறிகள் 6) பழங்கள் 7) மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் 8) அழகுத் தோட்டங்கள் 9) வீட்டுக் காய்கறி தோட்டங்கள் 10) தென்னந் தோப்பு 11) பழத்தோப்பு 12) பூந்தோட்டம் 13) சிறந்த அரங்கிற்கான பரிசு 14) பள்ளி குழந்தைகளுக்கான போட்டி இந்த ஆண்டு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. இதில் கட்டுரை போட்டி, பேச்சிப் போட்டி, காகிதப்பூ தயாரித்தல், ஓவியப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டன.

நிறைவு விழாவில் ஆண்கள் பிரிவில் அதிக பரிசுகள் பெறும் நபருக்கு **மலர் ராஜா** என்ற பட்டமும், பெண்கள் பிரிவில் அதிக பரிசுகள் பெறும் நபருக்கு **மலர் ராணி** என்ற பட்டமும் வழங்கப்படும்.

எதிர்வரும் பிப்ரவரி மாதம் 18-ம் தேதி மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ள நிறைவு விழாவில் மாண்புமிகு வேளாண் அமைச்சர், மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலர், வேளாண்துறையின் செயலர் முன்னிலையில் பல்வேறு பிரிவுகளில் பரிசுகள் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்க, மாண்புமிகு வேளாண் அமைச்சர் அவர்கள் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

இம்மலர் கண்காட்சிக்கு ஓர் சுற்றுலா கண்ணோட்டம் கொடுக்கப்பட்டு இந்த மலர் கண்காட்சியினை நடத்த சுற்றுலாத்துறையும் பங்கேற்றுள்ளது.